

நேற்று (16,8,2026), திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்த இயல் இசை நாடக மன்றத்தின் முன்னாள் தலைவர் வாகை சந்திரசேகர் அவர்கள், அண்மையில் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்ற சங்கீத நாடக அகாடமி (அகாதெமி புரஸ்கார்) தேசிய விருதைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.



சென்னை கிழக்கு மாவட்டம்,துறைமுகம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி இல்லத் திருமண விழாவில்,கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, மணமக்கள் ஹெச்.பாலமுருகன் – வி.பிரியங்கா ஆகியோரை வாழ்த்தினார். இதில் முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., தயாநிதிமாறன் எம்.பி., துறைமுகம் காஜா, ஜோசப் சாமுவேல் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

### தமிழ்நாட்டைப் பாதிக்கும் கனிம வளங்கள் திருத்த மசோதா:

# ஒன்றிய அரசைக் கண்டிக்க த.வெ.க. அரசுக்கு தயக்கம் ஏன்?

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**சென்னை, ஆக. 17 –**

**“தமிழ்நாட்டை பாதிக்கும் கனிம வள திருத்த மசோதா குறித்து த.வெ.க. அரசு வாய்மூடி இருப்பது ஏன்?” என்று நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவா கனிமொழி கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.**



தூத்துக்குடி விமான நிலையத்தில் திமுக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இதுவரை ஒன்றிய அரசை எதிர்த்து தவெக அரசில் இருக்கக்கூடியவர்களோ, முதலமைச்சரோ, அமைச்சர்களோ எந்தக் கேள்வியும் எழுப்பியதாக எனக்குத் தெரியவில்லை. தமிழ்நாட்டை பாதிக்கும் வகையில் மூன்று நாட்களுக்கு முன்பு கனிம வளங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதித் தொகை மிகப்பெரிய அளவில் பாதிக்கக் கூடியதோடு, மாநில உரிமைகளையும் பாதிக்கப்படும். ஆனால், இதுதொடர்பாக எந்தவிதமான விவாதமும் நடைபெறவில்லை. இதுபற்றி இதுவரை தவெக அரசோ, அமைச்சர்களோ பேசவில்லை

மேலும், தமிழ்நாட்டை பாதிக்கக்கூடிய இந்த முக்கியமான விவகாரம் குறித்து இன்று வரை தவெக அரசு எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. ஒன்றிய அரசை எதிர்ப்போம் என்று வாய் வார்த்தையாகச் சொல்கிறார்களே தவிர, தமிழகத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளில் எதையும் எதிர்த்து பேசுவதில்லை என்பதுதான் உண்மை.

**தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணிக்கு வாய்ப்பில்லை!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தற்போதைய அரசு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை நீட்டித்திருப்பது நிச்சயமாக வாழ்த்துக்குரிய ஒன்று. தி.மு.க.–அ.தி.மு.க. கூட்டணி என்பது த.வெ.க. கட்சியினரின் கனவாக இருக்கலாம். ஆனால், எந்தக் காலத்திலும் அதற்கான வாய்ப்பு இல்லை.

தொடர்ந்து தவெக கட்சியினரைச் சேர்ந்தவர்கள் மீது பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகிறது. தொடர் குற்றச்சாட்டுகள் வந்துகொண்டிருந்தாலும், சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படவில்லை; கைது நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தூத்துக்குடியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

அதேபோல், பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருகிறது. இதுபோன்ற சம்பவங்களில் தவெக அரசு உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. குறிப்பாக, தங்களுடைய கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் மீது குற்றச்சாட்டு எழும்போது, கட்சிக்காரர்களை பாதுகாப்பதில்தான் கவனம் செலுத்துகிறார்களே தவிர, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி கூறினார்.



அண்ணா அறிவாலயத்தில் 80–ஆவது சுதந்திர தினத்தையொட்டி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். உடன் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், நே.சிற்றரசு, சட்டத்துறை துணைச் செயலாளர் மருது கணேஷ், பகுதிக் கழகச் செயலாளர்கள் மா.பா. அன்புதுரை, கே.ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ்[6], கழக மாற்றுத் திறனாளிகள் அணி தலைவர் ரெ.தங்கம், உள்ளிட்ட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### கர்ப்பிணி தாய்மார்களுக்கு

# உடல் ஆரோக்கியத்தைவிட மன ஆரோக்கியமே முக்கியம்!

## முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை!

திருவண்ணாமலை, ஆக. 17 –

கர்ப்பிணி தாய்மார்களுக்கு உடல் ஆரோக்கியத்தைவிட, மன ஆரோக்கியமே முக்கியம், கர்ப்ப காலம் முழுவதும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டுமென திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில் நடைபெற்ற வளைகாப்பு விழாவில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் அவர்கள் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்தி பேசும்போது குறிப்பிட்டார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்களை அமைப்பாளராக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த 2025ஜுலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

16.08.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகித்தார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே. குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஒ. பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.



விழாவில் கலந்து கொண்டு முன்னாள் தொழிலாளர் நலத் துறை அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான சி.வெ.கணேசன் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப் பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசினார். அவர் உரையாற்றும்போது...

கடந்த 20 ஆண்டுகளாக முன்னாள் அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களின் உடன்பிறவா சகோதரராக விளங்கி வருகிறேன். இங்கே வருகை தந்திருக்கிற கர்ப்பிணி பெண்கள் அனைவருக்கும் என்னுடைய மகள் வயதுதான் இருக்கும். நீங்களெல்லாம் மக்களை பெற்ற மகராசியாக பல்லாண்டு காலம் வாழ வேண்டும்.

திருவண்ணாமலை அண்ணாமலையாரை தரிசிக்க உலகமெங்கும் இருந்து இலட்சக்கணக்கான ஆன்மீகப் பெருமக்கள் வருகை தருகிறார்கள். திருவண்ணா மலையின் ஒன்பது பக்க சாலைகளையும், நான்கு வழிச் சாலைகளோ என வியக்கும் வண்ணம் அண்ணன் எ.வ.வேலு செய்திருக்கிறார். இந்த தொகுதிக்கு தேவையான அனைத்தையும் அண்ணன் எ.வ.வேலு செய்து முடித்தி ருக்கிறார்.

5, 7, 9 ஆகிய மாதங்களில் தான் பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்துவார்கள். அதுவும் பெண் வீட்டில்தான், உற்றார் உறவினரோடு சிறப்பாக நடைபெறும். தந்தைதான் முன்னின்று நடத்துவார். பெண்களுக்கு கணவனைவிட அப்பாவைத்தான் எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பார்கள். இங்கு உங்களுக்கு தந்தை இடத்திலிருந்து அண்ணன் எ.வ.வேலு அவர்கள் இந்த விழாவை நடத்தி வருகிறார். 30, 40 வருடங்களுக்கு முன்பு இந்த மருத்துவ வசதிகள் கிடையாது. எனக்கு தெரிந்து கிராமங்களில் மசக்கையின்போது சாம்பல், மண்ணு, புளியம்பழம், மாங்காய் இவற்றை உண்ணுவார்கள். இதையெல்லாம் நீங்கள் தவிர்க்க வேண்டும்.

150 நாள் குழந்தையைக் கூட காப்பாற்ற முடியும். இதை மருத்துவ உலகம் சாதித்துக் காட்டியிருக்கிறது. உடல் ஆரோக்கியம் எவ்வளவு முக்கியமோ, அதைவிட மன ஆரோக்கியம் முக்கியம். கர்ப்பக் காலம் முழுவதும் உங்கள் மனம் மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும். கோபம், ஆத்திரம், மகிழ்ச்சி இவை அனைத்தும் உங்களுக்கு பிறக்கப் போகும் குழந்தைக்கும்போய் சேரும். எனவே மகிழ்ச்சியாக இருங்கள். டிவி. செல்போனை தவிர்த்து விடுங்கள். குடும்பத்தா ரோடு மகிழ்ச்சியாக உரையாடுங்கள்.

அதிகம் பெற்றால் அல்லல் மயம், இரண்டு பெற்றால் இன்ப மயம், ஒன்று பெற்றால் ஒளி மயம், நாம் இருவர் நமக்கேன் ஒருவர் என வாழ்ந்தது போதும், இதனால் நமக்கு நாடாளுமன்றத் தொகுதிகள் குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. அதனால் ஆணோ, பெண்ணோ இரண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளுங்கள். பெண் என்று கவலைப்படாதீர்கள். இந்தியாவிலேயே பெண்கள் அதிகம் வேலைக்கு செல்கிற மாநிலம் தமிழ்நாடு. நம் தலைவர் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு தர வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்துள்ளார். தலைவர் மு.க. ஸ்டாலின் பெண்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம், பெண்களுக்கு 50சதவீதம் இடஒதுக்கீடு, பெண்களுக்கு பேருந்தில் விடியல் பயணம், கல்லூரி பயிலும் பெண்களுக்கு புதுமைப்பெண் திட்டத்தில் மாதம் ரூபாய் ஆயிரம் என வழங்கியுள்ளது தொடர்கிறது.

இனி வருங்காலங்களில் ஆண்கள், பெண்களுக்கு வரதட்சணையாக 100 பவுன், கார் இவற்றையெல்லாம் வாங்கித்தந்தால்தான் பெண் தருவார்கள் என்ற காலம் விரைவில் வரும். நீங்கள் சுகப்பிரசவத்தில் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்று நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்ல குடிமக்களை உருவாக்கிட வாழ்த்தி விடை பெறுகிறேன்.

இவ்வாறு உரையாற்றினார்.

மருத்துவ ஆலோசனைகளை, மகப்பேறு மருத்துவர் டாக்டர் கவிதா வழங்கினார்.

நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறினார்.

விழாவில் டி.வி.எம்.நேரு, குட்டி க.புகழேந்தி, சி.எஸ்.சண்முகம், வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, ஆ.தே.முருகையன், பி.ஆர்.நாகராஜ், ஆர்.வெங்கடேஷ், சாம்.ரகுநாத், மணி (எ) விக்னேஷ், பா.தீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

